kanchipuram District

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | வணிகவியல் | மதிப்பெண்கள் : 90

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். 20×1=20

1) பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலை மட்டங்களின் அளவு
அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

2) குறியிலக்கு மேலாண்மையின் செயல்முறையின் முதல்நிலை எது?
அ) முக்கிய முடிவு பகுதியை நிர்ணயிப்பது ஆ) நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வது
இ) குறிக்கோள்களுடன் வளங்களைப் பொருத்துவது
ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது

3) உடனடிச் சந்தை என்பது நிதிக்கருவிகளை விநியோகம் செய்வதும் மற்றும் ரொக்கம் செலுத்துவதும் _______ நடைபெறும் ஒரு சந்தை ஆகும்.
அ) உடனடியாக ஆ) எதிர்காலத்தில் இ) நிலையானது ஈ) ஒரு மாதத்திற்கு பின்னர்

4) சந்தைப்படுத்தக்கூடிய உரிமையியலானஆவணம் காலமுறை வைப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு எனக் குறிப்பிடப்படும் ஆவணத்தை _______ என்று குறிப்பிடுகிறோம்.
அ) கருவூல இரசீது ஆ) வைப்புச் சான்றிதழ் இ) வணிக இரசீது ஈ) அரசுப்பத்திரங்கள்

5) நம்பிக்கையுள்ள வணிகர் என்பவர்
அ) காளை ஆ) கரடி இ) மான் ஈ) வாத்து

6) தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திர வர்த்தகம் தொடங்கிய ஆண்டு _______
அ) ஜனவரி 1996 ஆ) ஜூன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

7) முதலில் வேலை அடுத்தது மனிதர் என்பது ஒரு _______ கோட்பாடு
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

8) சிறந்த வேலை செயல்திறனை உறுதிப்படுத்துவதற்காக பணியாளர்களின் திறன்நிலைகளை எது மேம்படுத்துகிறது
அ) பயிற்சி ஆ) தேர்ந்தெடுப்பு இ) ஆட்சேர்ப்பு ஈ) செயல்திறன் மதிப்பீடு

9) சந்தையிடுகையில் சந்தையிடு கையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

10) சமூக சந்தைப்படுத்துதல் என்பது _______ யுடன் தொடர்புடையது
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூகமாற்றம் ஈ) சமூகதீமை

11) _______ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

12) ஜிஎஸ்டி என்பது
அ) சரக்கு மற்றும் சமூகவரி ஆ) சரக்கு மற்றும் சேவை வரி
இ) சரக்கு மற்றும் விற்பனை வரி ஈ) சரக்கு மற்றும் ஊதிய வரி

13) சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது
அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

14) எத்தனை மாதங்களுக்கு பின் காசோலை காலாவதியாகிறது
அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதங்கள்

15) தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர்தாங்கி ஆ) புதுமைபடைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

16) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எது காலம் தாழ்த்தும் பழமை விரும்பி தொழில் முனைவோருக்குப் பொருந்தாது
அ) பழமை பேணுவது ஆ) இடர் வெறுப்பது இ) ஐயப்படுவது ஈ) மாற்றிக் கொள்வது

17) புதிது புனைதல் மற்றும் தொழில் முனைவோர் கலாச்சாரத்தை ஊக்குவிக்க இந்திய அரசு _______ முயற்சிக்கிறது.
அ) அடல்புதுமை புகுத்தல் திட்டம்
ஆ) பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு
இ) விஞ்ஞான அடிப்படையில் அதிகாரமளித்தல் மற்றும் அபிவிருத்தி
ஈ) அடல் இன்டிவேஷன் சென்டர்ஸ்

18) ஒரு நிறுமம் தனது பதிவு அலுவலகம் அமைந்துள்ள இடம் பற்றிய அறிக்கையை ________ நாட்களுக்குள் நிறுமம் பதிவாளருக்கு தெரிவிக்க வேண்டும்
அ) 14 நாட்கள் ஆ) 21 நாட்கள் இ) 30 நாட்கள் ஈ) 60 நாட்கள்

19) இயக்குனர்கள் நிறுமத்தின் பணத்திற்கு ________ ஆகிறார்கள்.
அ) வங்கியாளர் ஆ) பங்குதாரர்கள் இ) முகவர் ஈ) பொறுப்பாண்மையாளர்கள்

20) ________ கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டும் கூட்டப்படும்
அ) சட்டமுறை ஆ) ஆண்டுப்பொது இ) சிறப்பு ஈ) வகுப்பு

## பகுதி-ஆ

**7×2=14**

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) செயலூக்கமளித்தல் என்பதன் பொருள் யாது?
22) கடன் சந்தை என்றால் என்ன?
23) வைப்புச் சான்றிதழ் சந்தை என்றால் என்ன?
24) மனிதவள மேலாண்மை என்றால் என்ன?
25) பங்கேற்று நடித்தல் முறை என்றால் என்ன?
26) நிகழ்சரக்கு என்றால் என்ன?
27) கடனுறுதிச் சீட்டின் சிறப்பு இயல்புகளில் இரண்டினை குறிப்பிடுக
28) தொழில் முனைவோருக்கு தேவைப்படும் இரண்டு விதமான நிதியைக் குறிப்பிடுக
29) நிறுமம் உருவாக்கத்தில் உள்ள நான்கு நிலைகள் யாவை?
30) உரிமை மாற்று பணிகள் எவை?

## பகுதி-இ

**7×3=21**

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) மேலாண்மையின் வீச்செல்லையை தீர்மானிப்பவை எவை?
32) விதிவிலக்கு மேலாண்மையில் உள்ள செயல்முறைகள் என்ன?
33) ஏட்டுக்கடன் மற்றும் துணிகர முதல் வழங்கு நிறுமங்களை பற்றி விளக்குக.
34) காளை மற்றும் கரடி - விளக்குக
35) கட்டமைக்கப்பட்ட நேர்காணல் என்றால் என்ன?
36) காலத்தின் அடிப்படையில் சந்தையினை எப்படி வகைப்படுத்துவாய்?
37) புதிய பொருளாதார கொள்கை பற்றி சிறுகுறிப்பு தருக
38) தனிஉரிமை தொழில் முனைவோர் என்பவர் யார்?
39) சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளை தருக?
40) ஏன் முன்னுரிமைப் பங்குகள், "முன்னுரிமை பங்குகள்" என அழைக்கப்படுகின்றன?

## பகுதி-ஈ

**7×5=35**

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-**

41) மேலாண்மையின் பல்வேறு பணிகளை விளக்குக. (ஏதேனும் 5) **(அல்லது)**
நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் என்பவர் யார்?

42) விதிவிலக்கு மேலாண்மையின் குறைபாடுகள் பற்றி விவரி? **(அல்லது)**
ஏதேனும் ஐந்து அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.

43) அரசுப்பத்திரங்களின் இயல்புகளை விவரி? (ஏதேனும் 5) **(அல்லது)**
மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவரி. (ஏதேனும் 5)

44) பங்குச் சந்தை பணிகளை விவரி? (ஏதேனும் 5) **(அல்லது)**
விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளை கூறி விளக்குக.

45) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக. **(அல்லது)**
தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக. (ஏதேனும் 5)

46) பணிவழி பயிற்சிக்கும், பணிவழியற்ற பயிற்சிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக. ஏதேனும் 5 **(அல்லது)**
நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? ஏதேனும் 5

47) சந்தையிடுகை கலவையின் கூறுகளை விளக்குக. **(அல்லது)**
நவீன சந்தையிடுதலில் ஏதேனும் இரண்டு முறைகளை விளக்குக.

******